**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**

**2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 3 ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**I.A.No.2/2025 in I.A.NO. 1/2025 in O.S. No.154/2019**

திரு.சேசுராஜ் .... மனுதாரர்/மனுதாரர்/வாதி

/எதிர்/

1. திரு.தர்மராஜ்(இறப்பு)
2. திரு.முருகேசன்
3. திரு. ஜெயபால்கிருஷ்ணன்
4. திருமதி. செல்வராணி(இறப்பு)
5. திரு. கார்த்திக்
6. திரு. கோபிநாத் .... எதிர்மனுதாரர்/எதிர்மனுதார்கள் பிரதிவாதிகள்/புரோ பிரதிவாதிகள்

இம்மனுவானது இறுதியாக இன்று(03.02.2026) இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. B.வாசுதேவன் அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்ட நிலையிலும், 2 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தோன்றாத்தரப்பினராகியுள்ள நிலையில், 3 மற்றும் 6ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், மனு மற்றும் வழக்கு ஆவணங்களைப் பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்.

## உத்தரவு

மனுதாரர் தாக்கல் செய்த I.A.No. 1/2025ல் கண்ட புரோ 4ம் பிரதிவாதியின் பெயரை நீக்கி உத்தரவாக வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை **151–**ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2)**மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு மனுவுரை சுருக்கம்**

1. மனுதாரர் வழக்கில் கண்ட சொத்தை பொறுத்து, சென்ற 07.09.2025ம் தேதி இறந்துபோன 1ம் பிரதிவாதியின் வாரிசுகளைக் சேர்க்க உத்தரவு பிறப்புவிக்கப்பட்டது. அதன் தொடர்பாக 1ம் பிரதிவாதியின் மனைவி செல்லமணி, மகன்கள் கார்த்திக் மற்றும் கோபிநாத்தை வழக்கில் சேர்க்ககோரி I.A.No. 1/2025 தாக்கல் செய்தார்.

2. மனுதாரர் 1ம் பிரதிவாதியின் வாரிசுகளை வழக்கில் சேர்க்க மனு தாக்கல் செய்வதற்கு முன்பாக 1ம் பிரதிவாதியின் மனைவி செல்வராணி அவரது மகன்களான கார்த்திக் மற்றும் கோபிநாத்–ஐ வாரிசாக விட்டுவிட்டு காலமாகி விட்டார். ஆகவே, மனுதாரர் தாக்கல் செய்த ஆர்டர் 22 ரூல் 4ன்படியான I.A.No. 1/2025ன் மனுவில் கண்ட புரோ 4ம் பிரதிவாதி தேவையில்லாத நபராவார். ஆகவே மனுதாரர் தாக்கல் செய்த I.A.No.1/2025 மனுவில் கண்ட புரோ 4ம் பிரதிவாதியின் பெயரை நீக்கம் செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

4). **தீர்வு**

மனுதாரரின் மனு மற்றும் வழக்குக் கோப்பினைப் பரிசீலனை செய்ததில், இவ்வழக்கில் இறந்த 1ம்பிரதிவாதியின் மனைவியான I.A.1/2025ல் சேர்க்கப்பட்டுள்ள உத்தேச 4ம் பிரதிவாதியான திருமதி. செல்வராணி என்பவர் இறந்துவிட்டதால், அவரை I.A.No.1/2025லிருந்து நீக்கம் செய்து உத்தரவு

பிறப்பிக்க வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவில் 3வது எதிர்மனுதாரர் மற்றும் உத்தேச 6வது எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை இல்லை என்று மேலொப்பம் செய்துவிட்டதாலும், உத்தேச 4ம் பிரதிவாதியான திருமதி. செல்வராணி இறப்பு குறித்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித மாறுபட்ட கருத்தும் இல்லாததாலும், மனுதாரர் தன்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உத்தேச 4வது பிரதிவாதியான செல்வராணி இறந்துவிட்டார் என்று கூறியுள்ளதாலும், மேற்படி மனுவில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் மற்றும் மனுவை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு, இடைக்கால மனு எண். 1/2025ல் உள்ள உத்தேச 4ம் பிரதிவாதியின் பெயரை நீக்கும் பொருட்டு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை அனுமதிப்பதுதான் நீதியின் நலன் கருதி சரியானது என்று, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவில்**, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 03 ஆம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN

Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.02.03 16:08:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர் ஆத்தூர்.